**செய்தி வெளியீடு எண் : 1484** **நாள் : 29.08.2022**

<u>செய்தி வெளியீடு</u>

**இந்து சமய அறநிலையத்துறை சார்பில் 18 திருக்கோயில்களில் ரூ.105 கோடி மதிப்பீட்டிலான 25 புதிய திட்டப் பணிகளுக்கான கட்டுமானப் பணிகள் – மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (29.8.2022) தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத்துறை சார்பில் ரூ.105 கோடி மதிப்பீட்டில் 18 திருக்கோயில்களில் திருமண மண்டபங்கள், திருக்குளப் பணிகள், பக்தர்கள் தங்கும் விடுதி, விருந்து மண்டபம், அர்ச்சகர்கள் மற்றும் பணியாளர்கள் குடியிருப்பு, அன்னதானக் கூடம், முடிகாணிக்கை மண்டபம், காதுகுத்தும் மண்டபம், வணிக வளாகம், திருக்கோயில் பள்ளி, கல்லூரி கூடுதல் வகுப்பறை கட்டடங்கள், கலையரங்கம், புதிய அடுக்குமாடி குடியிருப்புகள், மண்டல இணை ஆணையர் அலுவலகம், ஓதுவார் பயிற்சிப் பள்ளி போன்ற 25 புதிய திட்டப் பணிகளுக்கான கட்டுமானப் பணிகளை காணொலிக் காட்சி வாயிலாகத் தொடங்கி வைத்தார்.

இந்து சமய அறநிலையத்துறை வாயிலாக திருக்கோயில்களின் வளர்ச்சிக்காக திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலங்கள் மீட்பு, 250 க்கும் மேற்பட்ட திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு, பல ஆண்டுகளாக ஓடாமல் இருந்த திருத்தேர்களை பழுதுபார்த்து வீதிஉலா, திருக்குளங்களை புனரமைத்தல், திருக்கோயில்களில் திருப்பணிகள் போன்ற பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதுடன், சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்ட புதிய அறிவிப்புகளையும் பக்தர்களின் பயன்பாட்டிற்காக ஒவ்வொன்றாக நிறைவேற்றப்பட்டு வருகிறது.

அந்த வகையில், மதுரை மாவட்டம், அருள்மிகு மீனாட்சி சுந்ததேஸ்வரர் திருக்கோயிலில் ரூ.35 கோடி மதிப்பீட்டில் பக்தர்கள் தங்கும் விடுதி கட்டும் பணி, மதுரை மாவட்டம், அழகர் கோவில், அருள்மிகு கள்ளழகர் திருக்கோயிலில் ரூ.12.90 கோடி மதிப்பீட்டில் விருந்து மண்டபம், காதுகுத்தும் மண்டபம் மற்றும் முடிக்காணிக்கை மண்டபம் கட்டும் பணிகள்; மதுரை மாவட்டம், வேங்கடசமுத்திரம், அருள்மிகு காட்டுப் பத்திரகாளியம்மன் திருக்கோயிலில் ரூ.3.70 கோடி மதிப்பீட்டில் திருமண மண்டபம் கட்டும் பணி;

சென்னை, அருள்மிகு வடபழனி ஆண்டவர் திருக்கோயிலில் ரூ.9.84 கோடி மதிப்பீட்டில் அன்னதானக் கூடம், முடி காணிக்கை மண்டபம் மற்றும் பல்நோக்கு கட்டடம் கட்டும் பணிகள்; சென்னை, அருள்மிகு ஏகாம்பரரேசுவரர் திருக்கோயிலில் ரூ.2.54 கோடி மதிப்பீட்டில்

வணிக வளாகம் மற்றும் குடியிருப்புக் கட்டடம் கட்டும் பணிகள்; சென்னை, மயிலாப்பூர், அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயிலில் ரூ.3.65 கோடி மதிப்பீட்டில் அர்ச்சகர்கள் மற்றும் பணியாளர்கள் குடியிருப்புக் கட்டடம் கட்டும் பணி; சென்னை, கோடம்பாக்கம், பரத்வாஜேஸ்வரர் திருக்கோயில் சார்பில் அஞ்சுகம் துவக்கப் பள்ளியில் ரூ.1.72 கோடி மதிப்பீட்டில் புதிதாக உணவருந்தும் கூடம் மற்றும் கலையரங்கம் கட்டும் பணிகள்;

சென்னை, திருவல்லிக்கேணி, அருள்மிகு பார்த்தசாரதி திருக்கோயில் சார்பில் ரூ.2.25 கோடி மதிப்பீட்டில் பேயாழ்வார் கோயில் தெருவில் பணியாளர்கள் குடியிருப்பு மற்றும் பக்தர்கள் தங்கும் விடுதி கட்டும் பணிகள், ரூ.3.22 கோடி மதிப்பீட்டில் துளசிங்கபெருமாள் கோயில் தெருவில் புதிய அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டும் பணிகள், ரூ.2.46 கோடி மதிப்பீட்டில் அய்யாப் பிள்ளை தெரு மற்றும் முத்துகாளத்தி தெரு ஆகிய இடங்களில் குடியிருப்புக் கட்டடம் கட்டும் பணிகள்;

காஞ்சிபுரம் மாவட்டம், திருநீர்மலை, அருள்மிகு ரெங்கநாதர் பெருமாள் திருக்கோயிலில் ரூ.1.90 கோடி மதிப்பீட்டில் அர்ச்சகர்கள் மற்றும் பணியாளர்கள் குடியிருப்புக் கட்டடம் கட்டும் பணி; காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர், அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் ரூ.2.95 கோடி மதிப்பீட்டில் திருமண மண்டபம் கட்டும் பணி; செங்கல்பட்டு மாவட்டம், திருவிடந்தை, அருள்மிகு நித்தியகல்யாணப் பெருமாள் திருக்கோயிலில் ரூ.4.30 கோடி மதிப்பீட்டில் திருமண மண்டபம் கட்டும் பணி;

திருவண்ணாமலை மாவட்டம், புதூர் செங்கம், அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலில் ரூ.2.78 கோடி மதிப்பீட்டில் திருமண மண்டபம் கட்டும் பணி; சேலம் மாவட்டம், அருள்மிகு அம்பலவாண சுவாமி திருக்கோயிலில் ரூ.3.65 கோடி மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த மண்டல இணை ஆணையர் அலுவலகம் கட்டும் பணி;

விருதுநகர் மாவட்டம், இருக்கண்குடி, அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலில் ரூ.3.22 கோடி மதிப்பீட்டில் அர்ச்சகர்கள் மற்றும் பணியாளர்களுக்கு குடியிருப்புகள் கட்டும் பணி; விருதுநகர் மாவட்டம், தேவதானம், அருள்மிகு நச்சாடை தவிர்த்தருளிய சுவாமி திருக்கோயிலில் ரூ.3.95 கோடி மதிப்பீட்டில் திருக்குளத் திருப்பணி; விருதுநகர் மாவட்டம், மாவூத்து, அருள்மிகு உதயகிரிநாதசுவாமி திருக்கோயிலில் ரூ.1.35 கோடி மதிப்பீட்டில் திருக்குளத் திருப்பணி;

தென்காசி மாவட்டம், குற்றாலம், அருள்மிகு பராசக்தி மகளிர் கல்லூரியில் ரூ.1 கோடியே 87 இலட்சத்து 50 ஆயிரம் மதிப்பீட்டில் கூடுதல் வகுப்பறைகள் மற்றும் நடைபாதை தளம் அமைக்கும் பணி; திருநெல்வேலி மாவட்டம், அருள்மிகு நெல்லையப்பர் அருள்தரும் காந்திமதி அம்மன் திருக்கோயிலில் ரூ.1 கோடியே 51 இலட்சத்து 50 ஆயிரம் மதிப்பீட்டில் ஓதுவார் பயிற்சிப் பள்ளிக் கட்டடம் கட்டும் பணிகள்;

என மொத்தம் ரூ.105 கோடி மதிப்பீட்டிலான திருக்கோயில்களின் புதிய திட்டப் பணிகளுக்கான கட்டுமானப் பணிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில், தலைமைச் செயலகத்திலிருந்து மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி.சந்தர மோகன், இ.ஆ.ப., இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் திரு.ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மேலும், மதுரையிலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக நாடாளுமன்ற உறுப்பினர் திரு. சு. வெங்கடேசன், சட்டமன்ற உறுப்பினர் திரு. கோ. தளபதி, மதுரை மாநகராட்சி மேயர் திருமதி வி. இந்திராணி, மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் மரு. எஸ். அனீஷ் சேகர், இ.ஆ.ப., சேலத்திலிருந்து நாடாளுமன்ற உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பார்த்திபன், சட்டமன்ற உறுப்பினர் திரு.இரா. ராஜேந்திரன், சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. செ. கார்மேகம், இ.ஆ.ப., சென்னையிலிருந்து சட்டமன்ற உறுப்பினர் திரு. ஜெ. கருணாநிதி, செங்கல்பட்டு மாவட்டம் – திருவிடந்தையிலிருந்து செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ஆ.ர. ராகுல்நாத், இ.ஆ.ப., உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

•••••••••••

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in